பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

27 05 2024 **MONDAY** **7.15 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களுக்கு சேவையாற்றுவதே ஆன்மிக செயல்பாட்டில் மிக முக்கியமானது என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. பாரம்பரிய மருத்துவம் தொடர்பான ஆய்வுகளில் மேலும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் வலியுறுத்தியுள்ளார்.

3. மக்களவைத் தேர்தலுக்கான ஏழாவது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப்பதிவையொட்டி, அரசியல் கட்சித்தலைவர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

4. கேரளாவில் தென்மேற்கு பருவமழை அடுத்த இரண்டு நாட்களுக்குள் தொடங்குவதற்கான சூழல் நிலவுவதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஒலிம்பிக் தகுதி சுற்று குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் **Ankushita Boro** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

*----இனி விரிவான செய்திகள்---*

<<<<<<<>>>>>>

மக்களுக்கு சேவையாற்றுவதே ஆன்மிக செயல்பாட்டில் மிக முக்கியமானது என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லி பாரத் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நல்வாழ்வுக்கு ஆரோக்கியமான மனநிலையே அடிப்படை என்று கூறினார்.

சுயநலத்தை கைவிட்டு, பொதுநல சேவையில் ஈடுபடுவதே ஆன்மிகத்தின் சிறப்பு அம்சமாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

தீவிரவாதம், போர், போன்றவை உலகை அச்சுறுத்தி வரும் சூழலில், மனிதநேயத்தை வளர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வது அவசியம் என்றும் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

பாரம்பரிய மருத்துவம் தொடர்பான ஆய்வுகளில் மேலும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் வலியுறுத்தியுள்ளார்.

கர்நாடக மாநிலம் பெலகாவியில் உள்ள தேசிய பாரம்பரிய மருத்துவ கல்வி நிறுவனத்தில் இன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் அவர் பங்கேற்று பேசினார்.

அப்போது, நவீன வாழ்கை முறையில் உள்ள சவால்களை எதிர்கொள்ள பாரம்பரிய மருத்துவ முறைகள் பக்கபலமாக இருக்கும் என்று கூறினார்.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு குடிமக்கள் ஆரோக்கியமாக வாழ்வது அவசியம் என்று திரு ஜெக்தீப் தங்கர் குறிப்பிட்டார்.

<<<<<<<>>>>>>

மக்களவைத் தேர்தலுக்கான ஏழாவது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப்பதிவையொட்டி, அரசியல் கட்சித்தலைவர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி, செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில், நாட்டின் நலனை முதன்மையான நோக்கமாக கொண்டு பிஜேபி அரசு செயல்பட்டதாக தெரிவித்தார்.

நாட்டில் உள்ள இளையோரை ஊக்குவிக்கும் வகையிலும், அவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் வகையிலும் சுயசார்பு நடவடிக்கைகளில் அரசு கவனம் செலுத்தியதாக திரு நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

பிஜேபி மூத்த தலைவர் திரு அமித் ஷா, உத்தரப்பிரதேசத்தின் குஷி நகர், சந்தோலி தொகுதிகளில் தமது கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்டார்.

ஏழைகளின் நலனை காக்கும் வகையில் இந்த தேர்தலை பிஜேபி எதிர்கொள்வதாக அவர் தெரிவித்தார்.

வாரணாசி தொகுதியில் திரு நரேந்திர மோடிக்கு ஆதரவாக பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா, உத்தரப்பிரதேச முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் உள்ளிட்டோர் இன்று வாக்கு சேகரித்தனர்.

சமாஜ்வாதி கட்சித்தலைவர் திரு அகிலேஷ் யாதவ், இன்று காசிபூர் மற்றும் சந்தோலி தொகுதியில் நடைபெற்ற பிரச்சார கூட்டங்களில் பங்கேற்று பேசினார்.

பிஜேபி-யும், பகுஜன் சமாஜ் கட்சியும் மறைமுகமான கூட்டணியை கொண்டிருப்பதாக அவர் குற்றம் சாட்டினார்.

பிஜேபி மூத்த தலைவர் திரு ராஜ்நாத் சிங், இன்று ஜார்கண்ட் மாநிலம் ராஜ்மஹால் தொகுதியில் நடைபெற்ற பேரணி ஒன்றில் பங்கேற்று பேசினார்.

எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி, இடஒதுக்கீடு தொடர்பான பல தவறான தகவல்களை பரப்பி வருவதாக அவர் குற்றம் சாட்டினார்.

இடஒதுக்கீட்டை வழங்குவது தொடர்பான நடவடிக்கைகளை பிஜேபி அரசு தொடர்ந்து மேற்கொள்ளும் என்று திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி, இன்று பீகாரில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

பாடலிபுத்திரா தொகுதியில் நடைபெற்ற பிரச்சாரக்கூட்டத்தில் பேசிய அவர், மகளிரின் செயல்பாட்டை ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு மாதந்தோறும் எட்டாயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தை தமது கூட்டணி செயல்படுத்தும் என்று தெரிவித்தார்.

நாலந்தா தொகுதியில் ஐக்கிய ஜனதாதளம் தலைவர் திரு நிதிஷ்குமார் இன்று வாக்கு சேகரித்தார்.

அங்கு நடைபெற்ற பேரணி ஒன்றில் பேசிய அவர், அடுத்த ஆண்டு பத்து லட்சம் பேருக்கு அரசு வேலைவாய்ப்பு வழங்குவதை இலக்காக கொண்டு பீகார் அரசு செயல்படும் என்று தெரிவித்தார்.

பாட்னாவில் இன்று பிரச்சாரம் மேற்கொண்ட பிஜேபி மூத்த தலைவர் டாக்டர் மோகன் யாதவ், 55 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த நாட்டை ஆண்ட காங்கிரஸ் கட்சி வறுமை ஒழிப்பு குறித்து இப்போதும் பிரச்சாரம் மேற்கொண்டு வருவதாக குற்றம் சாட்டினார்.

<<<<<<<>>>>>>

பப்புவா நியூ கினியாவில் அண்மையில் நேரிட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்த கடினமான நேரத்தில் பப்புவா நியூ கினியா மக்களுக்கும், அரசுக்கும் இந்தியா துணை நிற்கும் என்று தெரிவித்துள்ளார்.

கடந்த 24-ஆம்தேதி பப்புவா நியூ கினியாவில் நேரிட்ட நிலச்சரிவில், சுமார் இரண்டாயிரம் பேர் வரை மண்ணில் புதைந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

மலைப்பாங்கான பகுதிகளில் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும், அழுத்தத்தின் காரணமாக மண் சரிவு சில இடங்களில் நேரிட்டு வருவதாகவும் அந்நாட்டு செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

<<<<<<<>>>>>>

சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில், ஹைட்ரஜனை எரிபொருளாக பயன்படுத்தி, வாகனங்களை இயக்குவது தொடர்பாக, ராணுவம் மற்றும் இந்தியன் ஆயில் நிறுவனம் இடையே இன்று ஒப்பந்தம் கையெழுத்தானது.

புதுதில்லியில் உள்ள தேசிய போர் வீரர்கள் நினைவிடத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், ஹைட்ரஜனை எரிபொருளாக கொண்டு இயக்கப்படும் அதிநவீன மின்சார பேருந்தை ராணுவத்திடம், இந்தியன் ஆயில் நிறுவனம் ஒப்படைத்தது.

இந்நிகழ்ச்சியில் பேசிய ராணுவ தலைமை தளபதி ஜென்ரல் மனோஜ் பாண்டே, சுற்றுச்சூழலை காக்கும் வகையில் புதுமையான தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதில் ராணுவம் ஆர்வம் காட்டி வருவதாக தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

ராஜ்கோட் வணிக வளாகத்தில் கடந்த சனிக்கிழமையன்று நேரிட்ட தீ விபத்து தொடர்பாக, குஜராத் உயர்நீதிமன்றத்தில் இன்று விசாரணை நடைபெற்றது.

இதுதொடர்பான வழக்கை விசாரித்த நீதிபதிகள் **Biren Vaishnav** மற்றும் **Devan Desai** அமர்வு இந்த விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்தது.

விபத்து நேரிட்ட விளையாட்டு மையமானது தீ தடுப்பு பாதுகாப்பு சான்றிதழ் உட்பட அடிப்படை அனுமதிகளை பெறாமல் இரண்டு ஆண்டுகளாக இயங்கி வந்தது தொடர்பாக, ராஜ்கோட் மாநகராட்சி மற்றும் குஜராத் மாநில அரசு பதிலளிக்குமாறு அமர்வு உத்தரவிட்டது.

இதற்கிடையே, இந்த தீ விபத்து சம்பவம் தொடர்பாக விசாரிக்க சிறப்பு விசாரணைக்குழு ஒன்றை குஜராத் அரசு நியமித்துள்ளது.

அடுத்த மூன்று நாட்களில் இக்குழுவானது இடைக்கால அறிக்கையை தாக்கல் செய்யும் என்று தெரிவித்துள்ளது.

இந்நிலையில், குஜராத் மாநில உள்துறை அமைச்சர் திரு ஹர்ஷ் சங்வி, காந்தி நகர் தடய அறிவியல் ஆய்வகத்தில் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

ராஜ்கோட் தீ விபத்து தொடர்பான டி என் ஏ அறிக்கை தயாரிப்புப் பணிகளை மேற்பார்வையிட்ட அவர், குஜராத் அரசு, இந்த விபத்து விசாரணையில் தீவிர கவனம் செலுத்தி வருவதாக தெரிவித்தார்.

முன்னதாக, இந்த தீ விபத்து சம்பவத்தில் இரண்டு காவல்துறை அதிகாரிகள் உட்பட ஏழு பேரை குஜராத் மாநில அரசு இடைநீக்கம் செய்தது.

<<<<<<<>>>>>>

நாடு முழுவதும் வெப்ப அலையின் தாக்கம் தீவிரமடைந்துள்ள நிலையில், காஷ்மீர் பள்ளத்தாக்கில் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

அங்குள்ள குல்மார்க், பாஹல்கம் பகுதிகளில் கடந்த சில நாட்களாக சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதாகவும், அதனை முன்னிட்டு ஸ்ரீநகர் விமான நிலையத்தில், தினமும் 100 விமானங்கள் வரை இயக்கப்பட்டு வருவதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>

**Remal** புயல் வடக்கு – வடமேற்கு திசையில் நகர்ந்து இன்றிரவுக்குள் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக வலுவிழக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த புயலானது பங்களாதேஷ் மற்றும் அதனையொட்டியுள்ள மேற்குவங்கப்பகுதிகளில் மணிக்கு ஐந்து கிலோமீட்டர் வேகத்தில் வடக்கு நோக்கி நகர்ந்தது.

சுமார் ஆறு மணிநேரம் வரை அப்பகுதிகளில் அது மையம் கொண்டிருந்ததாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<<<<>>>>>>

தென்மேற்கு பருவமழை இயல்பைவிட கூடுதலாக இருக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தலைமை இயக்குனர் திரு **Mrutyunjay Mohapatra** கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், இயல்பைவிட ஆறு சதவீதம் மழைப்பொழிவு கூடுதலாக இருக்கக்கூடும் என்றார்.

கேரளாவில் தென்மேற்கு பருவமழை அடுத்த இரண்டு நாட்களுக்குள் தொடங்குவதற்கான சூழல் நிலவுவதாகவும் திரு **Mrutyunjay Mohapatra** தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஒலிம்பிக் தகுதி சுற்று குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் **Ankushita Boro** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

தாய்லாந்தின் பாங்காக்கில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 60 கிலோ எடைப்பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 4-1 என்ற புள்ளிக்கணக்கில் மங்கோலியாவின் **Namuun Monkhor**-ஐ வென்றார்.

------------------

ஆசிய ஜிம்னாஸ்டிக் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Dipa Karmakar** தங்கப்பதக்கம் வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

உஸ்பெகிஸ்தானின் **Tashkent**-ல் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் **Vault** பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

ஆசிய ஜிம்னாஸ்டிக் சாம்பியன் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற முதலாவது இந்தியர் என்ற பெருமையையும் **Dipa Karmakar** பெற்றுள்ளார்.

-------------

பக்ரைன் பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், மூன்று வெள்ளி, ஆறு வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் மனோஜ் சர்காரும், மகளிர் ஒற்றையர் பிரிவில் **Manisha Ramdoss**-ம் தங்கப்பதக்கம் வென்றனர்.

இதர ஒற்றையர் பிரிவுகளில் உமேஷ்குமார், ஜோதி மற்றும் தருண் வெள்ளிப்பதக்கத்தை கைப்பற்றினர்.

**Jagadeesh, Sukant Kadam, Alphia James, Dev Rathi, Naveen, Arati Janova** ஆகியோர் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

--------

ஆஸ்திரிய ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Subhankar Dey** வெண்கலப்பதக்கம் வென்றார்.

-----------------

பிரான்சில் நடைபெற்ற சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில், இந்தியாவின் **Eldhose Paul** வெண்கலப்பதக்கம் வென்றார்.

ஆடவர் **Triple Jump** பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

பிரான்சில் நடைபெற்ற சர்வதேச நீச்சல் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீஹரி நட்ராஜ் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 100 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

------------------

பெருவின் லிமாவில் நடைபெற்ற உலக இளையோர் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில், இந்தியா 8 தங்கம், 6 வெள்ளி, 9 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

-----------------

உஸ்பெகிஸ்தானுக்கு எதிரான இரண்டு நட்புணர்வு மகளிர் கால்பந்து போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

23 பேர் இந்த அணியில் இடம்பெற்றுள்ளனர்.

முதலாவது போட்டி வரும் 31-ஆம் தேதியும், இரண்டாவது போட்டி அடுத்த மாதம் 4-ஆம் தேதியும் நடைபெறவுள்ளது.

-------------

டென்னிஸ் போட்டிகளுக்கான தரவரிசை பட்டியலின் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் யுகி பாம்ரி 52-ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

------------

பெல்ஜியத்தில் நடைபெற்றுவரும் புரோ லீக் ஹாக்கிப்போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா 5-4 என்ற கோல் கணக்கில், அர்ஜென்டினாவை வென்றது.

**<<<<<<<END>>>>>>**